செ.வெ.எண்:494 நாள்: 01.08.2020

**கொரோனா தடுப்பு பணிகளில் முன்னின்று பணியாற்றும் களவீரர்களுக்கு கொரோனா தொற்று தடுப்பு மருந்து பெட்டகத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (01.8.2020) புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியரகத்தில் அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு கொரோனா தொற்று தடுப்பு மருந்து பெட்டகத்தினை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலுக்கிணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா நோய் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட முழுவதும் கொரோனா நோய் தொற்று உள்ளவர்கள் கண்டறியப்பட்டு உடனுக்குடன் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அரசு மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கு உயர்தரமான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதுடன் சத்தான உணவும், யோகா, மனஅழுத்தப் பயிற்சி போன்ற பல்வேறு வகையான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் பயனாக மாவட்டத்தில் இது வரை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 1,279 நபர்கள் பூரணகுணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

மேலும் மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் முன்னின்று பணியாற்றும் களவீரர்களான அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், காவல்துறையினர், தூய்மைப் பணியாளர்கள் போன்றவர்களை கொரோனா நோய் தொற்றிலிருந்து பாதுகாத்து அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் ஏற்கனவே தமிழக அரசின்

சார்பில் சிங் மாத்திரைகள், அர்செனிக் ஆல்பம் மற்றும் கபசுரக் குடிநீர் பொடி ஆகியவை வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து தற்பொழுது கொரோனா தொற்று தடுப்பு மருந்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. இதில் கபசுரக் குடிநீர் 3 பாக்கெட், மூன்றடுக்கு பாதுகாப்பு முகக்கவசம் 15, மல்டிவிட்டமின் மற்றும் சிங்க்சல்பேட் மாத்திரைகள் தலா 30, கைகளுவும் சோப்பு 3, கிருமி நாசினி திரவம் 1 ஆகியவைகள் அடங்கி உள்ளது. இதனை முன்னின்று பணியாற்றும் களவீரர்கள் உரிய முறையில் பயன்படுத்தி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து கொரோனா நோய் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும்.

மேலும் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், காவல்துறையினர் உள்ளிட்ட அனைத்து முன்கள வீரர்களுக்கும் கொரோனா தொற்று தடுப்பு மருந்து பெட்டகம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் திருமதி.மு.பூவதி, ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.மரிய லூயிஸ் பெக்கி ஹோம்ஸ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**